25.06.2024

O.S.No.186/2019

வா.சா.1.திரு.உமாமகேஸ்வரன் த.பெ.சண்முகம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. எனது இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் டிப்ளமோ படித்துள்ளேன். எனது வீடு அய்யர்பங்களாவில் உள்ளது. எனது வீடு அமைந்துள்ள பகுதியில் இருந்து தாவா சொத்து 2 முதல் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளவைதான் தாவா சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள இடத்தினை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் காணப்படும் கட்டிடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கட்டிடம் என்றால் சரியல்ல. என்னோடு சேர்ந்து தாக்கல் செய்துள்ள மற்ற வழக்குகளின் வழக்கு சொத்தும், எனது சொத்தும் ஒன்றோடொன்று இணைந்த சொத்துக்கள் என்றால் சரிதான். என்னைப்போன்று வழக்கு தாக்கல் செய்துள்ள எனதுதாவா சொத்தோடு இணைந்த மற்ற சொத்துக்களின் சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்த வழக்கின் வாதிகள் அனைவரும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. எனக்கு முன்பு மற்ற வழக்குகளில் சாட்சியம் அளித்த வாதிகள் என்னிடம் காட்டப்பட்ட புகைப்படத்தில் காணப்படும் இடம் தான் தாவா சொத்து என சாட்சியம் அளித்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கோபாலகிருஷ்ண பள்ளி தெரியுமா என்றால் தெரியும். அந்த பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழமையான பள்ளி என்றால் இருக்கலாம். தாவா சொத்திற்குள் பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் செல்ல முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தினை கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 15 நாட்களுக்கு முன்பு நான் பார்த்தேன். தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை சுற்றிலும் முள்கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 15 நாட்களுக்கு முன்பு தாவாசொத்தினை பார்வையிட்டதாக சொல்வதால் அதில் அமைக்கப்பட்டுள்ள முள்கம்பி வேலியை பற்றி ஞாபகம் இல்லை என்று நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

3. நான் தாவா சொத்தினை அளந்து அத்துமால் பார்த்துகிரையம் வாங்கவில்லை என்றால் கிரையம் வாங்கி 20 ஆண்டுகள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாவா சொத்தினை அளந்து அத்துமால் பார்த்து கிரையம் வாங்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் கார்த்திகேயன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன். எனது கிரைய ஆவணத்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இஎம்ஜி.சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து என்.எஸ். கார்த்திகேயன் என்பவர் பொது அதிகார பத்திரம் பெற்றதாக சொல்லப்படும் அசல் ஆவணத்தினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர்

என்.எஸ்.கார்த்திகேயனுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் நேரிடையாக தெரியாது, அந்த ஆவணத்தின் மூலம் தெரியும். எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே எப்போது இருந்து பிரச்சினை என்றால் 2019 ம் ஆண்டு முதல் பிரச்சினை. இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர் கார்த்திகேயனுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் விவரத்தினை நான் அவர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் கார்த்திகேயனிடம் விசாரித்து தெரிந்துகொண்டேன்.

4. எனக்கு கிரையம் கொடுத்த என்.எஸ்.கார்த்திகேயன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வகையறாவுக்கு கல்லூரி, பள்ளி ஆகியவை அடங்கிய நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் கேள்விபட்டுள்ளேன், எனக்கு தெரியும். இஎம்ஜி சௌந்திராஜன் எனது உடன்பிறந்த சகோதரரான என்.எஸ்.கார்த்திகேயன் என்பவருக்கு எந்த காலத்திலும் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்க வில்லை என்றாலும, அதற்கான அவசியமும் அவருக்கு இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுப்பட்டுள்ள சர்வே எண்.169/1, சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்டுள்ள சொத்துக்களில் ஒன்று என்றால் சரிதான். தாவாசொத்து உள்பட என்னைப் போன்று தாக்கல் செய்துள்ள மற்ற வழக்கு சொத்துக்கள் அனைத்தும் முள்கம்பிவேலி அமைக்கப்பட்டு நான்கு வாயில்கள் அடங்கிய பகுதிக்குள் உள்ளன என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

5. தாவா சொத்து முள்கம்பிவேலி அமைக்கப்பட்டு அதற்குள்தான் அமைந்துள்ளது என்றாலும், அந்த சங்கதியை தெரிந்து கொண்டு, இந்த வழக்கிற்காக ஞாபகம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குள் பிரதிவாதி அனுமதி இல்லாமல் செல்ல முடியவில்லை என்ற அடிப்படையில் அவர்களுக்கு எதிராக நான், இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து பிளாட் எண்.3 ல் அடங்கியுள்ளது. தாவா சொத்து சர்வே எண் 169/1 ல் அடங்கியுள்ளதா அல்லது சர்வே எண்.169/2 ல் அடங்கியுள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் ஒருபோதும் கம்பிமுள்வேலி அமைக்கவில்லை என்றால் சொத்தினை வாங்கிய காலகட்டங்களில் அமைத்திருந்தேன். தாவா சொத்து கம்பிவேலி எதுவும் இல்லாமல் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான், சிறுசிறு செடிகள் முளைத்து காலியிடமாக உள்ளது.

6. எனது சகோதரர் என்எஸ் கார்த்திகேயன் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரது கையெழுத்தினை மோசடியாக உற்பத்தி செய்து, அவரது பெயருக்கு மோசடியான பொது அதிகார ஆவணத்தினை உற்பத்தி செய்து, அதன் அடிப்படையில் தாவா சொத்தினை எனக்கு மோசடியாக கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 20.04.1996 தேதியிட்ட அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தினை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். நான், அய்யனாரிடம் இருந்து எந்த சொத்தினையும் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். அவரது கிரைய ஆவணத்தின் அசலை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

அதே போல் இஎம்ஜிசௌந்திராஜன் அய்யனார் என்பவருக்கு தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்களில் கட்டுப்பட்ட சொத்துக்களை கிரையம் செய்துகொடுத்தாக சொலலப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அய்யனாரை எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அதேபோல் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யனாருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தின் அசலை நான் பார்த்தில்லை என்றால் சரிதான். அய்யனாருக்கு, இஎம்ஜி சௌந்திராஜன் எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் கிரைய ஆவணம், பொது அதிகார ஆவணம் மோசடியானவை என்று தெரிந்திருந்தும், இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

7. 1ம்பிரதிவாதி டிரஸ்ட் சார்பாக பள்ளி கல்வித்துறையிடம் தாவா சொத்தினை விற்பதற்கு அனுமதி பெற்றதாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், அவ்வாறு அனுமதி பெற்றதாக சொல்லப்படும் ஆவணத்தினை நான் பார்த்தில்லை என்றால் சரிதான். அதே போல் இந்தியன் வங்கி ஊமச்சிகுளம் கிளையில் ரூபாய்.50,000/- இஎம்ஜி சௌந்திராஜன் டிரஸ்ட்க்காக வைப்பீடு செய்யப்பட்டதாக சொல்லப்படும் சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தினை நான் நேரிடையாக பார்த்தில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை இந்த வழக்கிற்காக பொய்யாக நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றாலும், இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத சங்கதிகளை பொறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-5 ஆவணமானது எனது கிரைய பத்திரத்துடன் ஒன்றிணைந்து பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

8. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணை எனக்கு ஓரளவு தெரியும். இஎம்ஜி சௌந்திராஜன் எந்த காலத்திலும் என்எஸ் கார்த்திகேயனுக்குபொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், அந்த ஆவணம் மோசடியான ஆவணம் என்றும் எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் சொல்லி உள்ள சங்கதி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன்பின்பு அந்த பொது அதிகார ஆவணத்தின் உண்மை தன்மையை நிருபிக்கும் பொருட்டு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-5 லேஅவுட் இந்த வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகிய சொத்துக்களை பொறுத்து எந்த காலத்திலும் இஎம்ஜி சௌந்திராஜன் பிளாட்டுகளாக பிரித்து கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து இன்றைய தேதி வரை வருவாய் துறையில் பெயர் மாற்றப்படாமல் உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தினை நான் மோசடியாக கிரையம் பெற்றுள்ளதால்தான், வருவாய் துறை ஆவணங்களில் தாவா சொத்து குறித்து பெயர் மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து எனக்கு தெரிந்து சமதளமாக இருந்தது என்றாலும், மேடு பள்ளமாக இருநததில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்து விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்றாலும், எந்த காலத்திலும் அது பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு கிரையம் செய்யப்படவில்லை

என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த என்.எஸ்.கார்த்திகேயன் அரசுப்பணி ஆற்றி ஓய்வு பெற்று தற்போது வீட்டில் உள்ளார். என்.எஸ்.கார்த்திகேயனை இந்த வழக்கில் அவசிய தரப்பினராக நான் சேர்க்க தவறியதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் தாவாசொத்து உள்பட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் உள்ள சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் அளவீடுசெய்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்புதான் மற்ற வழக்காடிகள் சொல்லி எனக்குதெரியும். நீதிமன்ற ஆணையர் அவ்வாறு அளவீடு செய்து அதன் அடிப்படையில் சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துககளில் பள்ளி விடுதியும், விளையாட்டு மைதானமும் இயங்கி வருவதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை படி பள்ளி விளையாட்டு மைதானமாகவும், விடுதியாகவும் இருப்பதை தெரிந்துகொண்டு இந்த வழக்கிற்கா க தெரியாது என சாட்சிய்ம அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

10. எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ள பிரதிவாதி வகையறாவிற்கு இடையே நடந்தாக சொல்லப்படும் வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சங்கதிகள் பற்றி முழுமையாக தெரியாமல் அதில் தெரிந்தது போல் பொய்யாக சாட்சியம்அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எதிரிடை பாத்தியம் கோரி எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளதால அதனை நிருபிக்கும் வண்ணம் எந்த சாட்சியமும் முன்னிலை படுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 கட்டுப்பட்ட சொத்துக்கள் குறித்து பிரதிவாதிகளுக்கு இடையே நடைபெற்ற வழக்குகுளில் காட்டப்படவில்லை என்ற காரணத்திற்காக பிரதிவாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது அல்ல என்று நான் வாதிடுவது ஏற்கும்படியாக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த காலத்திலும் நான் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல, தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தற்போது வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

11. தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருப்பதை ஒப்புக்கொண்டு மோசடியாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பெரும்பான்மையான ஆவணங்கள் நகல் என்பதால் அந்த ஆவணங்களை சட்டப்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. என்னோடு வழக்கு தாக்கல் செய்துள்ள மற்ற வழக்கில் சாட்சியம் அளித்தவர்களின் சாட்சியங்களை நான் நன்கு தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்றாரபோல் உண்மையை மறைத்து சாதுர்யமாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் உள்பட 13 நபர்கள் ஒரே வழக்கறிஞரை சந்தித்து தனித்தனியாக சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான், அன்றாடம் நடைபெறும் வழக்கு நடவடிக்கைகள் குறித்து நாங்கள் அனைவரும் கலந்து பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் ஒன்றாகதான் இதற்கு முன்பு இந்த வழக்கில் ஆஜர் ஆவதற்கு நீதிமன்றம் வந்தோம் என்றால் சரிதான்.

12. எனக்கு முன்பு சாட்சியம் அளித்தவர்கள் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்169/2 ஆகிய சொத்துக்களில் பிரதிவாதிகள் பள்ளிக்கு பாத்தியப்பட்ட விளையாட்டு மைதானமும், விடுதியும் இருப்பதை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளதை மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 பொது அதிகார ஆவணம் நகல் என்றால் சரிதான். அந்த ஆவணம் நகல் என்பதால் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்றாலும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் சித்திக்காது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து குறித்து எனது உரிமையை குறிப்பாக மறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்காடி உள்ளதால் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவ சொத்தில் எனக்கு உ ரிமையே சித்திக்காதபோது நான் கோரியிருக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.